(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 24.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2022 ஏப்ரல் 08 வெள்ளிகிழமை, மு.ப. 10.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

10/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் காணிகளை இழந்த ஆட்களுக்கு நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட வேண்டுமென்பதையும்;

(ii) ஆயினும், காணிகள் வழங்கப்பட வேண்டிய சகலருக்கும் அதன் கீழ் காணிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) 2021.12.31 ஆந் திகதி வரை நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

(iii) அதன் கீழ் 2021.12.31 ஆந் திகதி வரை காணிகள் வழங்கப்பட வேண்டிய ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்படாத ஆட்களுக்கு வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வசம் காணிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு காணிகளை வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு முறையான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

43/2022

கௌரவ புத்திக பத்திறண,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 186 பன்குடாவெளி கிராம அலுவலர் பிரிவில், இலுப்பச்சேனை கிராமத்தில், முருகன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழங்கால இடிபாடுகள் கொண்ட இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

255/2022

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக குவைத் நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் மூடப்பட்டதன் நிமித்தம் குவைத்தில் பணிபுரிகின்ற இலங்கைத் தொழிலாளர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தூதரகத்தின் கீழுள்ள காப்பகத்திலிருந்து பதிவாகியுள்ள கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது குவைத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களை கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

575/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பொருளாதார நிலையங்களைத் தாபித்ததன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப நோக்கங்களுக்குப் புறம்பாக மேற்படி பொருளாதார நிலையங்கள் தற்போது இயங்கிவருவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் சகல பொருளாதார நிலையங்களையும் ஒரே நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1028/2022

கௌரவ சாந்த பண்டார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சமுர்த்தி அனுகூலம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது சேவையிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பாரிய சேவை ஆற்றப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொண்டுள்ள தொழில் ரீதியான பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1181/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வறுமை நிலை சதவீதமாக யாது என்பதையும்;

(ii) சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறையியல் யாது என்பதையும்;

(iii) சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகைமைபெறும் ஆகக் குறைந்த வருமான மட்டம் யாது என்பதையும்;

(iv) தற்போதுள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு சமுர்த்தி நிவாரண உதவியின் பெறுமதியின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(v) சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

(vi) மரணம், வருமானம் அதிகரித்தல் மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் வருடாந்தம் சமுர்த்தி திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்ற சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி நிவாரணம் கிடைக்க வேண்டுமாயினும் இன்றளவில் சமுர்த்தி நிவாரணம் கிடைக்காதுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1196/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச்செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண, வகவத்தை டயர் தொழிற்சாலை நிர்மாணக் கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பானது எத்தனை மெகாவாட் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1318/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(ii) மேற்படி விபத்துக்களின் காரணமாக மரணித்த நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி விபத்துக்களின் காரணமாக சேதமடைந்துள்ள சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1476/2022

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக்குளங்களுள் அரசாங்கத்தின் குளங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்கால நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத குளங்களையும் துரிதமாக புனரமைப்புச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1735/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2021/2022 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இப்போகத்தில் எதிர்பார்க்கப்படும் நெல் அறுவடையின் அளவு யாதென்பதையும்;

(iii) அந்த நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக இன்றளவில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்),— குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின்கீழ் எல்லாத் துடர்ச்சிகளையும் அல்லது குற்றவழக்குகளையும் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்கும் மற்றும் கையுதிர்ப்பதற்கும் மேலதிக நீதிவான்களாக தொழில் நியாயசபைகளின் தலைவர்களைக் கருதுவவதற்கு விடே ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை இருக்குமாக. மு.ப. 10.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 8.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா.2/2022

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா.3/2022

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப் பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா.4/2022

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா.5/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா.6/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா.7/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாகும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா.8/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவு செய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையிலொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா.9/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொராம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆசிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்ததினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா.10/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர் மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா.11/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் ஆபரண துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா.12/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட "சிலோன் ஸ்பைசஸ்" என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா.13/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,—இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா.14/2022

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிகளினுடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றும் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா.16/2022

கௌரவ ரோஹண பண்டார,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு முறையான இடமாற்றங்களை வழங்குதல்,— இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கென முறையான இடமாற்றக் கொள்கை நடைமுறையில் இல்லாதமை காரணமாக அவர்கள் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியிருப்பதனால், இச் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்காக முறையான இடமாற்றக் கொள்கையொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா.17/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்தல்.— அபிவிருத்தியடைந்த நாடுகளில்கூட கமக்காரர்களுக்கென பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதாலும், இலங்கையில் கமக்காரர்களுக்கென நடைமுறையிலுள்ள கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றப்படாமையால் அதன்பால் கமக்காரர்களை ஈர்ப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாலும், கமக்காரர்களுக்கு அதிகளவான நன்மைகள் கிடைக்கும் விதமாக இந்தக் கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் அரசாங்கத்தினால் மீண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.18/2022

கௌரவ ரோஹண பண்டார,— கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஆரம்பித்தல்,— தற்போது நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இன்றளவில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு பயன்தரக்கூடிய கல்விக்காகவே ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று அரசாங்கத்தினால் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா.19/2022

கௌரவ ரோஹண பண்டார,— உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை வழங்கும்போது நியாயமான கொள்கையொன்றைப் பின்பற்றுதல்,— பொது மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை முக்கியமான செயற்பொறுப்பினை நிறைவேற்றுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் சிற்றூழியர், தொழிலாளர் முதலிய நியமனங்களை வழங்கும் போது பெரும்பாலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் பிரதானியின் பிரிவுக்கு முக்கியத்துவமளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுவதனால் இந்த நிலைமையை மாற்றியமைத்து குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்படி தொழில் வாய்ப்புக்களை பகிர்ந்தளிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.20/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளை இலங்கையிலிருந்து இல்லாதொழித்தல்,— சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் உடல்ரீதியான தண்டனைகளையும் உளரீதியான துன்புறுத்தல்களையும் கண்டித்து 2021.02.12 ஆம் திகதி உயர் நீதிமன்ற வழக்கு இலக்கம் SC/FR/97/2017 மூலம் தண்டனைச் சட்டக்கோவையின் 341(i) ஆம் பிரிவை இரத்துச் செய்வதற்கும் UNCRC இன் இலக்கம் 19, 28(2) மற்றும் 37 ஆம் பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சின் 12/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதனாலும், 2020.03.01 ஆம் திகதி 08 வயது சிறுமியொருவர் பிரம்பால் அடித்து வீட்டில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனம் செலுத்தப்பட்ட போதிலும் மேற்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலேனும் அது தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினாலும், சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய நீண்டகால பாதகமான விளைவுகளை வெளிப்படுத்தி 2018.02.02 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய குழுவின் (UNCRC) இலங்கை மீதான கண்காணிப்பு அறிக்கை மூலம் சிறுவர் பாதுகாப்பின் நெருக்கடியான நிலைமை, குறிப்பாக உடல்ரீதியான தண்டனைகளை முடிவுக்குக் கொண்டுவருவது வலியுறுத்தப்பட்டுள்ளதனாலும், 2020.10.06 ஆம் திகதிய பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை இலக்கம் 304/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரியளவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவை சம்பந்தமாக திருப்தியடைய முடியாதென கல்வி அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனாலும், துரிதமாக சட்டங்களைத் திருத்துவதன் மூலமும் தற்போதுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா 22/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 23/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 24/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 25/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 26/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 272022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 28/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 29/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா.30/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா.31/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா 32/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 33/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 34/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 35/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 36/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகாணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா.37/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வட மேல் மாகாணத்தில் தொல்லியல் முக்கியத்துவமிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு அந் நாட்டின் வரலாறு மிக முக்கியமென்பதாலும், இன்றளவில் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாலும், எதிர்கால சந்ததியினருக்காக வட மேல் மாகாணத்தின் தொல்லியல் சார்ந்த இடங்களை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் துரித வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா.38/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாத்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமான அளவினர் கமத்தொழிலில் ஈடுபடுவதனால் அவர்களது எதிர்காலத்தை பாதுகாக்கும் பொருட்டு இப்பிரதேசத்தின் விலைமதிப்பற்ற வளமான நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா.39/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— எல்லே விளையாட்டை மேம்படுத்துதல்,— எல்லே விளையாட்டானது இலங்கையில் கிராமிய மக்களின் விளையாட்டாகத் திகழ்வதனால், அதனை மேலும் மேம்படுத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 40/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு சிறைச்சாலைகளை இடமாற்றுதல்,— தற்சமயம் இலங்கையிலுள்ள பெரும்பாலான சிறைச்சாலைகள் நகரங்களை அண்டியதாக அமைந்துள்ளதாலும், சிறைச்சாலைகளுக்குள் பாரிய இடநெருக்கடி நிலவுவதாலும், இச்சிறைச்சாலைகளை நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு இடமாற்றி, தற்போது சிறைச்சாலைகள் அமைந்துள்ள வளாகங்களிலிருந்து உச்சப் பயனை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா.41/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல்,— வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாவதன் காரணமாகவும், மேற்படி தொழிலாளர்களுக்கு அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் மிகச் சொற்பமான சேவையே வழங்கப்படுவதனாலும், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 42/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— ஆனவிழுந்தாவ ஈர நிலத்தைப் பாதுகாத்தல்,— சர்வதேச ரம்சார் சமவாயத்தின் மூலம் ஈர நிலமாக பெயரிடப்பட்டுள்ள ஆனவிழுந்தாவ ஈர நிலத்தை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 43/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவர சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் பெரும்பங்காற்றுகின்ற புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவரச் சூழல் தொகுதியினை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 44/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்ற இலங்கைத் தொழிலாளர்களை அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குதல்,— கொவிட்-19 தொற்று நோய் காரணமாக வெளிநாடுகளில் தமது தொழில்களை இழந்து பெரும் துன்பகரமானதொரு காலப்பகுதியை கடந்து இலங்கைக்குத் திரும்புகின்ற வெளிநாடு வாழ் இலங்கைத் தொழிலாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள முறையியல் இத் தருணத்தில் அவர்களால் தாங்க முடியாத பணச்சுமையாக உள்ளதால் உரிய காலப்பகுதியில் தமது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவதற்கு ஏற்ற வகையில் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

* 42.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213ஆ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 43.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122, 122அ மற்றும் VIIஅ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 44.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2240/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 45.

சுகாதார அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 72 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடன் ஆக்கப்பட்டு 2021 டிசெம்பர் 24 ஆம் திகதிய 2259/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 46.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 34 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 சனவரி 18 ஆம் திகதிய 2263/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 47.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 48.

வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 49.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 50.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 51.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு இயல்புகூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக் கூறுகள் முகாமை முறை தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 2249/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 10/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 52.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 01 ஆம் திகதிய 2260/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 53.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 01 ஆம் திகதிய 2260/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

54.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

60.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.